# ஐக்கிய நாடுகளின் சிறுமீனவ தொழிலாளர்களின் சர்வதேச ஆண்டு 2022

International Year of Small Scale Fishers of the United Nations,

"Our Small Scale Fishers' Matters"

## எமது சிறுமீனவர்கள் தொடர்பாக கவனம் செலுத்துவோம்

Campaign Toolkit

**நிகழ்ச்சி கைநூல்**

தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்

National Fisheries Solidarity Movement

கடலின் நீடித்து நிலைக்கக்கூடிய தன்மையின் மூலம் சிறுமீனவ கைத்தொழிலினதும், மீனவனினதும், நிலையான அபிவிருத்தி செயற்பாட்டினதும் உலகளாவிய அபிவிருத்திக்கு மற்றும் நிலையான தன்மைக்கு பாரிய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

Global future and Sustenance will depend on Sustainable Development of Oceans, Small Scale Fishery and Small Scale Fishing Communities.

ஐக்கிய நாடுகளின் சிறுமீனவர்களின் ஆண்டை மிகவும் பயனுள்ளதாகவும், அர்த்தமுள்ளதாகவும் நடாத்துவதற்கு பின்வரும் விடயங்களை குறிப்பிடுகின்றோம்.

- உணவு பாதுகாப்பு, தொழில் உருவாக்கல் மற்றும் ஏழ்மையை ஒழிக்கும் செயற்பாட்டின் பொழுது சிறுமீனவ தொழிலாளர்களின் ஆற்றலை கண்டறிதல்.
- சிறுமீனவ தொழிலாளர்கள் கடல் மற்றும் நீரியல் சூழல் தொகுதிகளின் நிலையான தன்மைக்கும், நீர்வாழ் உயிரினங்களின் நிலையான தன்மைக்குமான பங்களிப்பை புரிந்து கொள்ளுதல்.
- காலநிலை மாற்றத்தின் உலகளாவிய தாக்கத்தை குறைப்பதற்காக சிறுமீனவ தொழிலாளர்களின் பங்களிப்பை அங்கீகரித்தல்.
- உணவு பாதுகாப்பின் பொழுதும், பல்வகைத்தன்மையை பாதுகாப்பதற்கும் சிறுமீனவ பெண்களின் பங்களிப்பை பாராட்டுதல்.
- ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகளின் 14வது இலக்கான, நீடித்துநிலைக்கக்கூடிய அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்காக சமுத்திரம், கடல் மற்றும் வளங்களை நீடித்துநிலைக்கக்கூடியதாக பாவித்தல் தொடர்பாக கவனம் செலுத்துதல்.
- அரசதுறை, தனியார்துறை, சிவில் அமைப்புகள் நீரியல் சூழல் தொகுதிகள் மற்றும் அதில் தங்கிவாழும் சிறுமீனவ தொழிலாளர்களின் நிலையான அபிவிருத்தி தொடர்பாகவும், தலையீடு செய்வதன் முக்கியத்துவத்தை குறிப்பிடுதல்.
- சிறுமீனவ தொழிலாளர்களுக்கான சர்வதேச ஆண்டில் அவர்களின் நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி செயற்பாட்டுக்கும், கடல் மற்றும் நீரியல் வளங்களின் பாதுகாப்பிற்கும் சர்வதேச பிரஜைகளின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை குறிப்பிடுதல்.
- இலங்கை முன்னணியாக சிறுமீனவ தொழிலாளர்களின் நிலையான அபிவிருத்திக்கு அரச மற்றும் அரச சார்பற்ற, மத, அரசியல், தொழிற்சங்கங்கள், சூழல் அமைப்புகள் என்பவை பொது நோக்குடன் சிறுமீனவர்களின் சர்வதேச ஆண்டை வெற்றிக்கொள்வதற்காக அறிவை முன்னேற்றுவதற்கும், வாழ்வாதார அபிவிருத்திக்கும், அவ்விடயங்களுக்கு பாதகமாக தாக்கத்தை செலுத்தும் விடயங்களில் சிறுமீனவ மக்களை பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்காகவும் ஊக்குவித்தல்.
- இலங்கை அரசின் மற்றும் அதனையண்டிய மீனவ செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற அனைத்து நாடுகளிலும் நிலையான அபிவிருத்திக்காக சிறுமீனவ தொழிலாளர்களாக சிறுமீனவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உகந்த ஒத்துழைப்பை வழங்குமாறு கோருதல்
- சிறுமீனவ தொழிலாளர்களின் மற்றும் அவர்களின் மீனவ தொழிற்சங்கங்கள், மீனவ பெண்கள் அமைப்புகள், இளைஞர் அமைப்புகள், சிவில் அமைப்புகள் மற்றும் மீனவ கூட்டுறவு சங்கங்களின் முன்னேற்றத்திற்காக ஒத்துழைப்பு வழங்கி, அவற்றின் செயற்பாட்டாளர்களின் ஆற்றல்களை விருத்தி செய்வதற்கு பொருத்தமான ஒத்துழைப்பை வழங்குதல்.
- 2022ம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் சிறுமீனவ சர்வதேச வருடத்திற்கும், அதன் பின்பு செயற்படுத்துவதற்கும் 5 வருடத்திற்கான செயற்திட்டத்தை தயாரிக்க வேண்டும்.

**ஐக்கிய நாடுகளின் சிறுமீனவ தொழிலாளர்களின் ஆண்டு 2022**

சிறுமீனவ தொழிலாளர்கள், அவர்களின் குடும்பங்களிலுள்ள பெண்கள் மற்றும் பிள்ளைகள் இச் சமூகத்தில் மிக குறைந்த அங்கீகாரத்தை பெற்றவர்கள் என்பது ஒரு ரகசியம் அல்ல. சமூக ரீதியாக மீனவ கைத்தொழில் மிகவும் குறைந்த அங்கீகாரத்தை பெற்றுள்ளது. எனவே பிரஜைகளாக கௌரவத்துடன் நாம் மீனவர்கள் என கூறுவதற்கு மீனவ குடும்பங்களுக்கு இயலுகின்ற சூழலை கட்டியெழுப்ப வேண்டியுள்ளது. மீனவர்களிடையே, மிக அதிகமானவர்கள் தமது பிள்ளைகளை மீனவ கைத்தொழிலில் ஈடுபடுத்துவதில் பெரிதும் நாட்டம் தெரிவிப்பதில்லை. அதற்கு காரணம் பொருளாதார ரீதியாக ஒரு நல்ல நிலைமை காணப்பட்டாலும், சமூக அங்கீகாரம் கிடைக்கப்பெறாமையால் தமது பிள்ளைகளுக்கு சிறந்ததொரு கல்வியை வழங்கமுடியாமல் உள்ளனர். எனவே இத் தடைகளை வெற்றிக்கொள்வதற்காக பொருத்தமான கட்டமைப்பை உருவாக்கி, நடைமுறையிலுள்ள கட்டமைப்பை வலுப்படுத்தி, அவற்றை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவ திறனை முன்னேற்றுவதற்கான செயற்பாட்டை கட்டியெழுப்ப வேண்டும். மேலும் சிறுமீனவ கைத்தொழிலில் மீனவ பெண்களின் பங்களிப்பு ஓரங்கட்டப்பட்டுள்ளது. அதன் காரணமாக பெண்களின் உரிமையை உறுதி செய்தல் இப் போராட்டத்திற்குள் இருக்கும் மேலதிக போராட்டமாக காணப்படுகின்றது.

மீனவ சமூகத்திலுள்ள பிள்ளைகள் மீனவ கைத்தொழிலிருந்து விலகும் நிலைமை காணப்படுவதால், அவர்கள் விரும்பினால் தாம் வாழ்கின்ற சூழலின் நீடித்து நிலைக்கக்கூடிய தன்மைக்காக அதன் அபிவிருத்தி செயற்பாட்டில் ஈடுபடுபவர்களாகவும், செயற்படுத்துபவர்களாகவும் மற்றும் கண்காணிப்பாளர்களாகவும் இருக்க முடியும்.

2022 சிறுமீனவ தொழிலாளர்களின் ஆண்டில் இவ்வனைவரினதும் தலையீட்டால், சிறுமீனவர்களின் நீடித்துநிலைக்கக்கூடிய தன்மையையும், கடல் மற்றும் நீரியல்சூழல் தொகுதிகளின் நிலையான தன்மையையும், நிலையான அபிவிருத்தியையும் மையமாகக் கொண்ட சிறுமீனவ கைத்தொழிலின் பங்களிப்புகளுக்காக செயற்திறனுள்ள செயற்திட்டத்தை ஐக்கிய நாடுகள், அரசுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள் அனைத்தும் ஒன்றிணைந்து கைகோர்த்து செயற்படுத்த வேண்டும்.

இலங்கை அரசின் மீனவ மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சு உள்ளிட்ட சிறுமீனவ கைத்தொழில் மற்றும் மீனவர்களின் நிலையான அபிவிருத்திக்காக அர்ப்பணிக்கப்பட்ட அனைத்து நிறுவனங்களுக்கும் 2022ம் ஆண்டு சிறுமீனவர்களின் சர்வதேச ஆண்டில் செயற்படுத்துவதற்கு பொருத்தமான செயற்பாட்டை தயாரிப்பதற்கு முன்மொழிகின்றோம்.

அனைத்து குழுக்கள் மற்றும் பிரஜைகள் என்ற ரீதியில் கடல், நீரியல் வளங்கள் தொடர்பாகவும், அதில் தங்கிவாழும் சிறுமீனவர்கள் அல்லது வாழ்வாதாரங்கள் மற்றும் வளங்களை பாதுகாப்பது தொடர்பாகவும் தெளிவு பெறுவோம்.

எமது சிறுமீனவ கைத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் தொடர்பாக கவனம் செலுத்துவோம்.

**நீடித்துநிலைக்கக்கூடிய சிறுமீனவ கைத்தொழில் மற்றும் சிறுமீனவன்**

சிறுமீனவனை தக்கவைப்பதற்காக தனம், வரலாறு, கலாசாரம் மற்றும் அடையாளம் போன்ற அனைத்து விடயங்களும் தங்கியிருப்பது நீர்வாழ் சூழல் தொகுதியிலாகும்.

இந் நீர்வாழ் சூழல் தொகுதிகளில் உள்ளடங்கியுள்ள பல்வகைத்தன்மை சிறுமீனவர்களின் தனிச்சிறப்பான வளமாகும்.

சிறுமீனவனின் நிலையான அபிவிருத்தி கண்டிப்பாக கடல் மற்றும் நீர்வாழ் சூழல் தொகுதிகளின் நல்வாழ்வில் தங்கியுள்ளது.

உலகளாவிய நீடித்துநிலைக்கக்கூடிய எதிர்காலத்திற்காக கடல் மற்றும் நீர்வாழ் வளங்களை கவனமாக பயன்படுத்துவது அவசியமாகும்.

அதற்கமைய எமது கடல் மற்றும் நீர்வாழ் வளங்களின் பெறுமதியை இனங்கண்டு, ஐக்கிய நாடுகளின் 14வது நிலையான அபிவிருத்தி இலக்கை வெற்றிக்கொள்வதற்கான ஒத்துழைப்பை முன்னேற்றிக் கொண்டு தொடர்ச்சியாக செயற்படும் வகையில் எமது அரசிடம் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடம் கோரிக்கை செய்வோம்.

ஏனெனில் இது உலகளாவிய முயற்சியே தவிர தனிமைப்படுத்தப்பட்ட செயல் அல்ல ஆனபடியால் நிலையான மீனவ தொழிலாளர்களின் முன்னேற்றத்திற்காக விடாமுயற்சியுடன் செயற்படும் அனைவருடனும் கைகோர்த்து செயற்படுவோம்.

இலங்கையில் சிறுமீனவ கைத்தொழிலில் ஈடுபடும் மக்களுக்கும், சிறுமீனவ கைத்தொழிலுக்கும் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் சவால்களின் அடிப்படையில்,

- கடல் மற்றும் நீரியல் வளங்கள் மற்றும் எமது சிறுமீனவ தொழிலாளருக்கும், அவர்களின் நல்வாழ்வுக்கும், கலாசாராத்திற்கும் உள்ள முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுதல்,
- எமது கடல் மற்றும் நீர்வாழ் சூழல் தொகுதிக்கும், அதில் தங்கிவாழும் சிறுமீனவனுக்கும், வளங்களின் அதிகமான சுரண்டல்கள், வளங்களின் குறைந்த முகாமைத்துவம், கரையை அண்டிய சூழல் மற்றும் நீர் மாசடைவுகளால் ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்களை கண்டறிதல்.
- காலநிலை மாற்றத்தால் மற்றும் சூழல் மாசடைவால் கடல் உள்ளிட்ட நீர்வாழ் சூழல் தொகுதிகளுக்கும், அதில் தங்கிவாழும் மீனவ தொழிலாளருக்கும், வாழ்வாதாரங்களுக்கும் ஏற்பட்டுள்ள தாக்கத்தை புரிந்து கொள்ளுதல்.
- காலநிலை மாற்றங்களால் சிறுமீனவ தொழிலாளர்களுக்கு ஏற்படுத்தும் பாதகமான தாக்கங்களை குறைப்பதற்காக $CO_2$ மற்றும் மிலேன் வாயு வெளியேற்றுவதை கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளுதல்.
- ஐக்கிய நாடுகளின் 14வது நிலையான அபிவிருத்தி இலக்கான "நிலையான அபிவிருத்திக்காக கடல் மற்றும் கடல் வளங்களை பாதுகாத்து நிலையாக பாவித்தல்" என்பதனையும் மேலும் அதன் இலக்குக்கேற்ப கரையோர சூழல் தொகுதிகள் உள்ளிட்ட கடலை பாதுகாத்து அதனை நீடித்துநிலைக்கக்கூடியவாறு முகாமைத்துவம் செய்து அதில் தங்கிவாழும் மீனவர்களையும் பாதுகாப்போம்.
- கடல் அமிலத்தன்மை அடைவதன் மூலம் நிகழும் தாக்கத்திற்கு தீர்வுகளை தேடுதல் மற்றும் சூழலுக்கு பொருத்தமற்ற தொழில்நுட்பங்களை பாவிப்பதனால் அதிக சுரண்டலுக்கு உட்படுத்தப்படுகின்ற மீனினங்களின் வளர்ச்சிக்கு இடமளித்து சிறுமீனவர்களை பாதுகாத்தல்.
- அரசு, தனியார்த்துறை உள்ளிட்ட சிவில் அமைப்புகள் கடல் மற்றும் நீரியல் சூழல் தொகுதிகளின் நிலையான தன்மை, அதில் தங்கிவாழுகின்ற சிறுமீனவ மக்களின் வாழ்க்கைக்கு ஏற்படுத்தியுள்ள தாக்கம் தொடர்பாகவும், அது இனத்திற்கே செய்கின்ற தாக்கமாக குறிப்பிடுகின்றோம்.
- சிறுமீனவனினதும், அவர்களின் எதிர்கால பரம்பரையினதும் வாழ்வதாரத்திற்கு தேவையான வளங்கள், கடல் மற்றும் நீர்வாழ் சூழல் தொகுதிகளை பாதுகாப்பதற்காக சர்வதேச ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை மிக தெளிவாக குறிப்பிடுகின்றோம்.

சிறுமீனவர்கள் மற்றும் கடல் சூழல் தொகுதிகளுக்கான எமது தலையீட்டின் முக்கியத்துவத்தை வலுப்படுத்தி அதனை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். எமது செயற்த்திட்டங்களை தயாரிப்பதற்கு முன்பு எமது மக்களின் பிரதேச தேவைகளை மதிப்பீடு செய்து கவனம் செலுத்தப்பட வேண்டிய சவால்கள் தொடர்பாக கண்டறியப்பட வேண்டும்.

இதன் மூலம் 2022 IYSSF, தொடர்பாக எம்மால் நடைமுறைப்படுத்த வேண்டிய நிகழ்சிகளை தயாரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அவற்றுள் சில பின்வருமாறு

- எமது நாட்டில் கடல் மற்றும் நீரியல் வளங்களால் சிறுமீனவ குடும்பங்கள், மக்களுக்கு ஏற்படுத்தும் தாக்கங்கள் மற்றும் சமூக, பொருளாதார விலை
- கடல் மற்றும் நீர்வாழ் சூழல் தொகுதிகள் சிறந்த நிலைமையில் இல்லாது காணப்பட்டால் அதனால் சிறுமீனவர்களுக்கு ஏற்படுத்தும் தாக்கத்தின் அளவு
- பொருத்தமான நடவடிக்கைகளை எடுக்காமையால் நிகழுகின்ற பாதகமான தாக்கங்கள்
- கொள்கை வகுப்பாளர்களின் தலையீடு என்னவாக இருக்க வேண்டும்.
- பங்குதாரர்களுக்கு மற்றும் ஒத்துழைப்பு வழங்குபவர்களுக்கு கிடைக்க வேண்டிய பெறுமதி என்னவாக இருக்க வேண்டும்.

சர்வதேச சிறுமீனவ தொழிலாளர்களின் ஆண்டுக்கான ஒருங்கமைப்பு குழுவை கீழ்குறிப்பிடும் நபர்களின் பங்குபற்றுதலுடன் உருவாக்குவோம்.

- தேசிய மற்றும் மாவட்ட மீனவ அமைப்பு, மீனவ கூட்டுறவுச் சங்கங்கள், கிராமிய மீனவ சங்கங்கள் மற்றும் துணை அமைப்புகள்
- அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள்
- பாடசாலை சூழல் குழுக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் மத அமைப்புகள், பெண்கள், இளைஞர் மற்றும் பிரஜைகள் குழுக்கள்
- ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள்
- காலநிலை மாற்றத்தால் தாக்கத்திற்கு உள்ளான நபர்கள்
- கடல் வளங்கள் தொடர்பான குழுக்கள்

**ஒருங்கமைப்பு குழுவாக**

- யதார்த்தமான நோக்கில் திட்டமிடுதல்
- எத்தனை பேருடன் என்ன செய்யலாம்? என தீர்மானித்தல்.
- IYSSF கான பொருத்தமான நிகழ்ச்சிகளை ஒருங்கமைத்தல்
- இதற்கு தேவையான வளங்களை பெற்றுக்கொள்வதற்காக திட்டமிடுதல்
- குழுவிலுள்ள அங்கத்தவர்களுக்கு அவர்களின் திறன்களின் அடிப்படையில் செய்ய இயன்ற செயற்பாடுகளை கையளித்தல்.
- குறித்த செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான திகதிகளை நியமித்தல் மற்றும் நடைமுறைப்படுத்த வேண்டிய செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல்

## நாடென்ற ரீதியில் சிறுமீனவனின் வாழ்க்கை முறையை கட்டியெழுப்புவதற்கு பொருத்தமான செயன்முறைகளை தயாரித்தல்

- IYSSFக்கு திட்டங்களை தயாரிப்பதற்காக சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் எமது சிறுமீனவ சமூகத்தை இலக்குப்படுத்தி பிரதான செய்திகள் சிலவற்றை தயாரிப்போம்.

- நாம் இலக்குப்படுத்தும் மக்கள் குழுவை நினைவில் வைத்துக்கொண்டு பொருத்தமான கற்கை சம்பவ கதைகளை மற்றும் புகைப்படங்களை சேகரிப்பதற்கான நடவடிக்கை எடுத்தல்
- இச் செய்திகள் மற்றும் கதைகள், புகைப்படங்கள் மீனவ மக்களின் வெற்றியடைந்த சந்தர்ப்பங்கள், நாட்டின் பொருளாதாரத்திற்கு பங்களிப்பு வழங்குதல், வாழ்க்கையிலுள்ள சிரமங்கள் அல்லது தோல்விகள், பிரஜைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் சிரமங்கள் மற்றும் அவற்றை தீர்ப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் ஈடுபடுதல் என்பவற்றை இலக்குகளாக கொண்டிருக்க வேண்டும்.
- இச் செய்திகள் மூலம் யாதேனும் இலக்கை தக்கவைத்துக் கொண்டு நாம் அடைய வேண்டிய நோக்கங்களுக்காக தொடர்ச்சியாக செயற்பட வேண்டும்.
- தொடர்ச்சியாக சிறுமீனவ சமூகத்தின் மக்களாக எமது பொறுப்புகள் தொடர்பாக குறிப்பிடப்பட வேண்டும்.

## எமது செய்தி

இச் செய்திகள் பல்வேறு இலக்கு குழுக்களுக்கு அமைவாக இருக்க வேண்டும்.

- சரியான மற்றும் தெளிவான முறையில் அச்சுறுத்தல்கள், பெறுமதிகள் உள்ளடங்களாக தீர்வுகள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும்.
- இலகுவானதாகவும், விஞ்ஞான ரீதியாகவும் மற்றும் தொழில்நுட்ப விடயங்கள் உள்ளடங்களாகவும் தெளிவாக தயாரிக்கப்பட வேண்டும்.
- IYSSF செயற்பாட்டை திட்டமிடும் பொழுது எமக்கு பொருத்தமான செய்திகளை தெளிவான இலக்கை நோக்கி தயாரிக்க வேண்டும்.

உதாரணங்களாக,

- கடல் சூழலை சிறந்த முறையில் பேணுவதற்காக அனைவராலும் செய்யக்கூடிய விடயங்கள்- பிரஜைகளுக்கு நாட்டு மக்களுக்கு செய்ய இயன்றவை
- நிலையான மற்றும் ஆரோக்கியமான கடல் சிறுமீனவர்களுக்கு உள்ள முக்கியத்துவம்- பிரதேசத்திலுள்ள பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் யாரால் எடுக்கப்பட வேண்டும்?
- பொருளாதார தாக்கம்
  - சிறுமீனவர்களின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள கடலின் தாக்கங்கள்,
  - தேசிய பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள கடல்களின் தாக்கம்
  - தேசிய போசாக்குக்கு கடல் மற்றும் மீன் வளங்களின் பங்களிப்பு
  - தொழில் உருவாக்கலின் பொழுது ஏற்படும் தாக்கம்
  - தேசிய மற்றும் உலகலாளவிய ரீதியான கொவிட் 19 வைரஸ் தாக்கத்திற்கு பின்பு பொருளாதார, சமூக மறுசீரமைப்பு செயற்பாட்டுக்கு ஆறு மற்றும் கடல்களின் பங்களிப்பின் முக்கியத்துவத்தை குறிப்பிடுதல்

- கரையோரத்தில் நிகழும் சூழல் மாசடைவதன் மூலம் கடல் மற்றும் நீர்வாழ் சூழலுக்கு நிகழுகின்ற தாக்கம் காரணமாக ஒட்டுமொத்த அச்சுறுத்தல்களை முன்வைத்தல் மற்றும் போசாக்குக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் சவால்களை கண்டறிதல்

## IYSSF க்காக வலுவான மக்கள் கருத்தை உருவாக்குவதற்காக நிறுவனங்களை ஒன்று சேர்த்தல்

செய்திகளை உருவாக்கும் வகையிலான கருத்துக்கள் மற்றும் செயற்பாடுகளை தொகுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

- முக்கியமான மற்றும் சுவாரஸ்யமான
- அறிவை வளர்க்கும்
- உடனடி செயற்பாட்டில் ஈடுபடும்

- பிரதேசத்திலுள்ள வியாபார நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுதல்
- மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் தலையீட்டால் அவர்கள் தொடர்பாக சிறுமீனவர்களின் கவனம் அதிகரிக்கின்றது என்பதனை தெளிவுப்படுத்தல்.
- நாங்கள் முன்மொழிகின்ற செயற்பாடுகள் பின்வரும் அளவுகோல்களால் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதை உறுதிசெய்தல்.

- சிறுமீன்பிடி சமூகத்திற்கு கவர்ச்சிகரமாக இருக்க வேண்டும்.
- முக்கிய செய்திகளை தொடர்பாடல் செய்வதாக
- ஊடகங்களுக்கு சூடான மற்றும் செய்தி தகுதியானதாக காணப்படுதல்.
- இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் புதிய முறையிலான நிகழ்சிகளை ஒருங்கமைத்தல்.
- ஒருங்கமைக்கப்படுகின்ற நிகழ்சிகளின் மூலம் பிரஜைகளின் பிரச்சினைகளை வெளிக்கொணர்தல்.
- பிரஜைகளின் செயற்திறனான பங்களிப்பு மற்றும் அந் நிகழ்சிகளின் அடிப்படையான காரணி சிறுமீனவ பிரஜைகள் என்பதை உறுதிசெய்தல்
- இளைஞர் மற்றும் பெண்களின் தலைமைத்துவம் மேலெழுகின்ற வகையிலான நிகழ்சிகளை ஒருங்கமைத்தல்

## ஆக்கப்பூர்வமான வகையிலும், புதுமையானதாகவும் இருத்தல்

- இந்த வாய்ப்பு ஒரே நேரத்தில் ஏராளமான மக்களையும், சிறுமீனவர்களையும் ஈர்க்க கூடியதாக இருத்தல்.

- பொது மக்களின் புரிதலை முன்னேற்றுவதற்கான செயற்பாடுகள், விளையாட்டுக்கள், கண்காட்சிகள், வீதி நாடகங்கள்
- ஊடகத்தை இலக்குப்படுத்திய செயற்பாடுகள்
- ஊடக சந்திப்புக்கள்
  - சிறுமீனவ கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தலைவர்கள், பெண்கள் மற்றும் அரசியல்வாதிகளின் பங்களிப்பு
- சிறுமீனவர்கள் / கடலை மையாமாகக் கொண்ட செயற்பாடுகள்: உதாரணமாக,
  - ➢ உலக புவி தினம் ஏப்ரல் 22
  - ➢ உலக சூழல் தினம் ஜுன் 05
  - ➢ உலக சமுத்திர தினம் ஜுன் 08
  - ➢ உலக மீனவ தினம் நவம்பர் 21

**பொருத்தமான செயற்பாடுகள்**

- சுவரொட்டி போட்டிகள், சுவர் சித்திரங்கள்
- கவிதைகள், சித்திரங்கள் மற்றும் சிற்ப போட்டிகள்
- சமூக வலைத்தளங்களை பயன்படுத்தி
- பத்திரிக்கைகளுக்கு எழுத்தாக்கம் எழுதுதல்
- பிரதான ஊடகங்களான தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்சிகள்

## சிறுமீனவர்கள் குளம் மற்றும் கடலை மையமாகக் கொண்டு

- பொதுக்கூட்டங்கள், கலந்துரையாடல்கள், நேரடி சந்திப்புகள்.
- இறங்குதுறை மற்றும் தொழிலில் ஈடுபடும் இடங்களை அண்டிய தெளிவூட்டல்கள்
- பிளாஸ்டிக்கால் சூழல் மாசடைதல் உள்ளிட்ட மீன் வளங்களிள் அழிவு மற்றும் நீர்வாழ் சூழல் தொகுதிகளின் அழிவுகளுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள்.
- இணையத்தள கையொப்பங்களின் ஊடாக நீர்வாழ் சூழல் தொகுதிகளின் மாசடைதல், சிறுமீனவர்களுக்கு ஏற்படும் தாக்கங்கள் தொடர்பாக அழுத்த செயற்பாடுகள்.
- நீர்வாழ் சூழல் தொடர்பாக மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் வலையத்தளம் ஊடாக கையொப்பங்களை சேகரித்தலின் ஊடாக அழுத்த செயற்பாடுகள்
- குளம், ஆறு, கலப்பு, கண்டல் தாவர சூழல் தொகுதிகளை சுத்தம் செய்யும் நிகழ்ச்சிகளின் ஊடாக மக்களின் கவனத்தை ஈர்த்தல்

**ஊடக நிகழ்சிகளை ஒருங்கமைத்தல்**

ஊடகங்களின் ஊடாக IYSSF தொடர்பாக போதிய தெளிவை பெற்றுக்கொடுக்க வேண்டும். ஆனாலும் இதற்காக தொழில் ரீதியான ஊடக முயற்சியின் முக்கியத்துவத்தை குறிப்பிடுகின்றோம். அதன் ஊடாக மேலும் வெற்றிகரமான ஊடக பிரச்சாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடல் வேண்டும். இதற்காக சிறுமீனவ கைத்தொழில், குளம், கடல் மற்றும் சூழல் தொகுதிகள் தொடர்பாக உள்ள வீடியோ Slides, புள்ளிவிபரங்கள், Flip Chart, என்பவற்றை உபயோகிக்க வேண்டும். இதற்கு மேலதிகமாக புதிய வீடியோக்கள், துண்டுப்பிரசுரம் மற்றும் பல் ஊடகங்களை பயன்படுத்தி சமூகத்தை தெளிவுப்படுத்த முடியும். Logoக்களை உருவாக்கி பரந்த தெளிவூட்டலை அதற்கமைய ஒருங்கிணைக்க வேண்டும்.

இதற்காக Logo தயாரிப்பதை உடனடியாக ஆரம்பித்து ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் நபர்களை ஒன்றிணைத்து IYSSF கொண்டாட்டத்தை வெற்றி கொள்ள வேண்டும்.

**ஊடக நிகழ்சிகளை ஒருங்கமைக்கும் பொழுது எமது இலக்குகள் மக்களை மையப்படுத்தியதாக இருக்க வேண்டும்.**

**ஊடக நிகழ்சிகளை ஒருங்கமைத்தல்**

- ஊடக தொடர்பாடல் பட்டியலை தயாரித்து, பிரதேச, தேசிய உள்ளிட்ட வலய மட்டத்தில் சிறுமீனவர்கள் மற்றும் காலநிலை மாற்றங்கள் தொடர்பாக கவனம் செலுத்தும் ஊடகங்களை இனங்காணுதல்.
- ஊடக கலந்துரையாடலுக்கான பொருத்தமான இடங்களை கண்டறிதல். இதற்காக பிரஜைகளின் மட்டத்தில் கடல், நீலப் பொருளாதாரம், காலநிலை மாற்றங்கள், சிறுமீனவர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் செயற்படுகின்ற நபர்கள் மற்றும் இடங்களை கண்டறிதல்.
- ஊடக கலந்துரையாடல்களில் பங்குகொள்ளும் சிறுமீனவ தலைவர்கள், பெண்கள், இளைஞர்களின் பெயர்களை பொருத்தமான தலைப்புகளுடன் குறிப்பிட்டு ஊடகங்களுக்கு கடிதங்களை தயாரித்தல்.
- ஊடக கலந்துரையாடலுக்கு முன்பு தயாரிக்கப்பட்டுள்ள தகவல்கள், புள்ளிவிபரங்கள், வீடியோக்கள், Slides உள்ளிட்ட விடயங்களை ஊடகவியலாளர்களுக்கு மற்றும் ஊடக நிறுவனங்களுக்கு அனுப்புதல்.
- ஊடக நிகழ்சிகளுக்கு, அரசியல்வாதிகளுக்கு வேறு NGOகள் மற்றும் பிரபுக்களை அழைப்பித்தல்.
- "எமது SSF Campaign" பிரச்சாரம் செய்வதற்கு ஊடக நிறுவனங்களில் நடைமுறையில் உள்ள பல்வேறு கலந்துரையாடல்களை ஈடுபடுத்திக் கொள்வதற்குள்ள திறன்களை தேடுதல். - IYSSF தொடர்பாக இளைஞர்களால் செய்யப்பட்ட படைப்புகளை பிரதான ஊடங்களுக்கு அனுப்பி தொடர் பிரச்சாரத்தை நடைமுறைப்படுத்தல்.
- சிறுமீனவர்களின் சமூக மற்றும் கலாசார கொடைகளை சமூகமயப்படுத்துவதற்கு இது தொடர்பாக கவனம் செலுத்தும் நபர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களுடனான தொடர்பாடல்

**சமூக ஊடக செயற்பாடுகள் :**

#Our SSF Matters" என எமது சமூக ஊடக செயற்பாடுகளை பிரச்சாரம் செய்வோம். இங்கு கடல் மற்றும் நீர் வளங்களின் முக்கியத்துவம், அரசியல் மாற்றங்களுக்கான தாக்கம், நீலப்பொருளாதாரம் மற்றும் சிறுமீனவர்களின் முக்கியத்துவம் தொடர்பாக நாம் உலகிற்கு மீண்டும் கூறுவோம். உலக மட்டத்திலும் தேசிய பொருளாதார அபிவிருத்திற்கும், கடல் வளங்களின் முக்கியத்துவம், அதன் நிலையான தன்மைக்கு சிறுமீனவர்களின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டு சமூக ஊடக செயற்பாட்டை நடைமுறைப்படுத்துவோம். இதற்காக சமூக செயற்பாட்டின் திறமையான சிரேஷ்ட நபர்களின், பிரபுக்களின், விளையாட்டு குழுக்களின், மதத் தலைவர்களின் ஒத்துழைப்பை பெறுதல்.

பல்வேறு மட்டங்களில் பிரஜைகளை இணைத்துக் கொள்வதற்காக பல்வேறு விளையாட்டுக்கள் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களை பயன்படுத்தல்

புதிய முறையிலான நிகழ்சிகளை ஒருங்கமைத்து இளைஞர் மற்றும் பிரஜைகளின் பங்குபற்றுதலை முன்னேற்றுதல்.

உயர்தரம் மற்றும் பல்கலைக்கழகங்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக பொருத்தமான நிகழ்சிகளை போராசிரியர்களின் ஒத்துழைப்புடன் ஒருங்கமைத்தல்.

பல்வேறு Hash Tags வகைகளை தயாரித்து ஐக்கிய நாடுகளின் சிறுமீனவ தொழிலாளர்களின் ஆண்டை சிறந்த முறையில் கொண்டாடுவதற்காக சமூக ஊடகங்களுக்குள் முன்னணி கவனத்தை ஈர்ப்பதற்காக செயற்படுவோம்.

#IYSSF 2022

#Our SSF Matters

எம்மிடம் இருக்கும் திறமைகளை பகிர்ந்து கொள்வதற்காக அனைத்து செயற்பாட்டாளர்கள் மற்றும் இளைஞர்களை ஊக்குவிப்போம்.

- சிறுகதைகள்
- புகைப்படங்கள்
- செய்திகள்
- வீடியோக்கள்
- கவிதைகள், பாடல்கள்
- FB Post

சர்வதேச மற்றும் தேசிய ரீதியாகவுள்ள முக்கியமான தகவல்களை NAFSO ஊடாக பிரச்சாரம் செய்தல்

- பல்வேறு புள்ளிவிபரங்களை Info-graphyயாக முன்வைக்க முடியும்.
- பல்வேறு வகையான புத்தகங்களிலிருந்து எடுக்கப்பட்ட முக்கிய செய்திகளை தொடர்பாடல் செய்ய முடியும்.
- FAO அல்லது ICSF போன்ற தகவல்களைக் கொண்ட நிறுவனங்களுடன் தொடர்ச்சியாக தொடர்பாடலை பேணுதல்.
- புத்திஜீவிகளை சந்தித்து பொருத்தமான ஆக்கங்களை அல்லது ஆக்கப்பூர்வமான செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளுதல்

இச் செய்திகளில் குளம் மற்றும் கடலின் முக்கியத்துவம், சிறுமீனவனின் பெறுமதி தொடர்பாக குறிப்பிடப்பட வேண்டும் அவை அழிவுக்குள்ளாக்கப்பட்டிருத்தல் மற்றும் அவற்றை பாதுகாப்பதற்கு எமது பொறுப்பு என்பவற்றை குறிப்பிட முடியும்.

மேற் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களும் NAFSO வின உத்தியோகப்பூர்வ Blogger ல் உள்ளடங்க வேண்டும்.

# ஐக்கிய நாடுகளின் சிறுமீனவ தொழிலார்களின் சர்வதேச ஆண்டான 2022 ஆண்டுக்கு பின்பு

நாம் நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகளின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு IYSSFஆண்டுக்கான செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முதலே இச் செயற்பாட்டின் கண்காணிப்பு மற்றும் மீளாய்வு தொடர்பாக திட்டமிடல்களை தயாரித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறே நாம் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் மற்றும் சவால்களையும் கண்டறிய வேண்டும்.

எமது கண்காணிப்பு செயற்பாட்டுக்கு பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வினாக்களில் சில பின்வருமாறு:

- நடைமுறைப்படுத்திய நிகழ்சிகளின் ஊடாக சிறுமீனவர்களின் வாழ்க்கை முறைமைக்குள் சிறந்ததொரு மாற்றத்திற்காக பெற்றுக்கொண்ட வெற்றிகரமான பெறுபேறுகள் என்ன? ஆரம்பிக்கப்பட்ட செயற்பாடுகளுக்குள் எத்தனை செயற்பாடுகள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும்?
- இந் நிகழ்சியில் எத்தனை பேர் பங்குபற்றினார்கள்? என்ன முறை பயன்படுத்தப்பட்டது? அது பயனுள்ளதாக அமைந்ததா?
- சிறுமீனவ தலைவர்கள் எத்தனை பேர் இச் செயற்பாட்டில் வலுப்பெற்றார்கள்?
- இச் செயற்பாட்டுக்கு கிடைக்கப்பெற்ற கருத்துக்கள். இக் கருத்துக்களின் ஊடாக எத்தனை பேர் சிறுமீனவ கைத்தொழிலுக்கு பங்களிப்பு செலுத்தியுள்ளார்கள்?
- இச் செயற்பாட்டின் பெறுபேறாக புதிதாக எத்தனை கற்கை விடயங்கள் உருவாக்கப்பட்டது?
- குறித்த இலக்கு குழுவிலுள்ளவர்கள் கடல், சிறுமீனவர்கள், கடல் வளங்கள், நிலையான பாவணை தொடர்பான அறிவு, மனப்பாங்கு, திறன் விருத்தி அல்லது கருத்துக்களின் மாற்றம் போன்வற்றில் சிறந்த முன்னேற்றம் அடைந்துள்ளார்களா?
- இத் தகவல்களுக்காக மூலாதாரங்களாக பிரசுரிக்கப்பட்ட தகவல்களின் பட்டியல், ஊடக பிரச்சார விபரங்கள், வானொலி, தொலைக்காட்சி பிரச்சாரங்கள், தகவல்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பட்டியல் உள்ளடங்களாக

**மீளாய்வு :**

எம்மால் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து செயற்பாடுகளையும் பரவலான பிரதிநிதித்துவத்துடன் கூடிய நபர்களுடன் ஈடுபடுத்தி எதிர்கால செயற்பாடுகளுக்காக பொருத்தமான அறிவுரை மற்றும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியும்.

எதிர்கால செயற்பாடுகளை பயனுள்ளதாக நடைமுறைப்படுத்துவதற்கு மட்டுமல்ல எமக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற அனைவருக்கும் எமது செயற்பாட்டின் வெற்றியை முன்வைப்பதற்காக மீளாய்வில் கிடைக்கும் பெறுபேறுகளை பயன்படுத்திக்கொள்ளலாம்.

ஒரு தினத்தில் எமது இலக்குகளை அளவிடுதல் மிகவும் சிரமமான விடயமாக இருக்கலாம். எனவே நாம் இலக்காகக் கொண்டிருக்கும் செயற்பாட்டின் முன்னேற்றம், பெறுபேறு, மீளாய்வை நடாத்துவதற்காக திட்டவட்டமான காலவரையறையை திட்டமிட்டுக்கொள்ள வேண்டும்.

- IYSSFகு அமைவாக நடைமுறைப்படுத்துகின்ற செயற்பாட்டில் எதிர்பார்க்கின்ற இலக்குகளை அடைவதற்கான நோக்கங்களையும் இலக்குகளையும் தயாரிக்க வேண்டும்.
- என்ன நோக்கத்தை அடைந்தோம் என்பதனை அளவிடுவதற்காக சுட்டிகளை தயாரிக்க வேண்டும்.

- மீளாய்வுக்கான திட்டத்தை தயாரித்தல். பொருத்தமான வினாப்படிவம், தகவல்கள் சேகரிப்பதற்கான செயன்முறையைப் போன்றே இதற்கு தேவையான வளங்களை கண்டறிதல்
- மீளாய்வு மற்றும் கண்காணிப்புக்கான சிறந்த செயன்முறையை தெரிந்தெடுக்கவும். (அளவீட்டு மற்றும் தர ரீதியாக)

IYSSF செயற்பாட்டை வெற்றிக்கொள்வதற்காக வலுப்படுத்தல் செயற்பாடு

சர்வதேச ரீதியாக,

- ஐக்கிய நாடுகளின் சர்வதேச சிறுமீனவர்களின் ஆண்டுக்கான சின்னம் (லோகோ) ஒன்றை தயாரித்துக் கொள்ள வேண்டும். இதற்காக பொருத்தமான சின்னத்தை தயாரிப்பதற்கான போட்டியை ஒருங்கமைப்பதன் மூலம் நிகழ்த்த வேண்டும்.
- இவ் விடயங்கள் தொடர்பாக அனைத்து அமைப்புகளுக்கும் பொதுச்சின்னத்தை தயாரிப்பதற்காக உலக மீனவ சம்மேளனத்துடன் இணைந்து கலந்துரையாடலை ஆரம்பிக்க வேண்டும். அதன் ஊடாக IYSSF தொடர்பாக உலகளாவிய மட்டத்தில் கவனத்தை ஈர்ப்பதற்காக செயற்பட முடியும்.

தேசிய ரீதியாக

- இத் திட்டத்துக்கு பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்காக குழுவொன்றை நியதித்தல்
- இயங்குவதற்கான செயற்பாடு
- ஊடக செயற்பாடு
- கண்காணிப்பு செயற்பாடு
- தகவல்களை தொகுக்கும் குழு
- கல்விமான் மற்றும் அரசியல் செயற்பாடு

இச் செயற்பாட்டை வெற்றிக்கொள்வதற்காக தொடர்பாடல் நிலையத்தை நிறுவி அதன் ஊடாக செயற்படுவதனால் மேற்குறிப்பிடப்பட்ட குழுக்கள் சிறந்ததொரு பரஸ்பர ஒத்துழைப்புடன் செயற்படும் என எதிர்பார்கின்றோம்.

இச் செயற்பாட்டை முன்மொழிந்து ஆவணப்படுத்தியவர்:
ஹர்மன் குமார, தேசிய அமைப்பாளர், தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கம்
மொழிப்பெயர்ப்பு : தீபா சுபாஷிணி கமலநாதன்
திகதி: 2020 மே மாதம் 01ம் திகதி